T.C-043

018/DM/23

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I – GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

**I. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : (6 × 4 = 24)**

1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

2. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித்தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

3. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

4. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?

5. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

6. செய்குதம்பிப் பாவலர் 'சதாவதானி' என்று பாராட்டப் பெறக் காரணம் யாது?

7. உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்றால் என்ன?

8. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக :

பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக் கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழமன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

[Turn over

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : (6 × 6 = 36)**

9. காற்றே வா ! என்னும் பாடலில் பாரதியார் பாடுவது யாது?

10. பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்தும் துணையாகக் கொள்ளாததைக் குறித்தும் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

11. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

12. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?

13. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக.

14. கீழ்க்காணும் உரையாடலில் இடம் பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.

பாமகள் : வணக்கம் ஆதிரை ! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே?

ஆதிரை : ஆமாம் ! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன்.

பாமகள் : அப்படியா ! என்ன தலைப்பு?

ஆதிரை : கல்வியில் சிறக்கும் தமிழர் !
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ?

பாமகள் : ஏன் வராமல்?

15. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

16. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

**III எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி : (4 × 10 = 40)**

17. இந்தியாவில் தமிழகத்தை கொரோனா பெருந்தொற்று இல்லாத முதன்மை மாநிலமாக மாற்ற உம்முடைய திட்டங்கள் அறிவுரைகளை கட்டுரை வடிவில் தொகுத்து எழுதுக.

18. உழவை வளர்ப்போம் ! உழவனைக் காப்போம் ! என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

19. பாரதியின் கவிதைகள் – காலத்தால் அழியாதவை – கட்டுரை எழுதுக.

20. ஆள்வினை உடைமை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

21. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியின் சிறப்பை நண்பனுக்கு கடிதமாக எழுதுக.

22. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதால் இரவில் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை கூறி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.

———————